**செய்தி வெளியீடு எண்: 757** **நாள்: 17–12–2011.**

# வணிகவரித்துறையின் அதிரடி ஆய்வு

தமிழக அரசின் வணிகவரித்துறையின் முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர் அவர்களின் ஆணையின்படி, சென்னையில் இன்று சுமார் 50 வணிக இடங்களில் வணிகவரித்துறையின் 150 அலுவலர்களால் அதிரடியாக திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு செய்யப்படும் வணிகர்கள் அனைவரும் அரசுக்கு முறையாக வரி செலுத்துகிறார்களா என ஆய்வு செய்யப்படுகிறது. திடீர் ஆய்வில் வரி ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்டால், வணிகர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த திடீர் ஆய்வு குறிப்பாக இரும்பு மற்றும் எஃகு மற்றும் மின்சார பொருட்களின் வியாபாரம் செய்யும் வணிகர்களின் வணிக இடங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

ஏற்கனவே, வணிகவரித்துறையில், போலி வணிகர்களை களையெடுப்பதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பல போலி வணிகர்களின் பதிவுச்சான்றுகள் இரத்து செய்யப்பட்டு, சட்ட பூர்வமான வரி விதிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் போலி வணிகர்களின் நடவடிக்கைகளை தீவிரமாக கட்டுப்படுத்தவும், வரி ஏய்ப்பினை தடுக்கவும், கடும் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அதிரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உண்மையான வணிகம் செய்யாமல், மதிப்பு கூட்டு வரி சட்டத்தின் கீழ் உள்ளீட்டு வரி வருவாயை கணக்கில் காண்பித்து போலி வணிகம் செய்பவர்களை களை எடுப்பதற்கு இந்த ஆய்வு நடத்தப்படுகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**